# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**சென்னை – 600 051**

**2019–20 கல்வியாண்டிற்கான இளநிலை பட்டப்படிப்புகளுக்கான**

## சேர்க்கை அறிவிப்பு

## பிவிஎஸ்ஸி & ஏஎச் மற்றும் பிடெக்

2019–20ஆம் கல்வியாண்டிற்கான கீழ்க்கண்ட இளநிலை பட்டப்படிப்புகளில் சேர்க்கைக்கு தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்களிடமிருந்து **08.05.2019 காலை 10:00 மணி முதல் 10.06.2019 மாலை 05:45 மணி வரை இணையதளம் மூலமாக விண்ணப்பங்கள்** (Online application) வரவேற்கப்படுகின்றன.

| பட்டப்படிப்புகள் | மொத்த இடங்கள் | | கல்லூரி |
|---|---|---|---|
| **கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பராமரிப்பு பட்டப்படிப்பு** BVSc & AH **5½ ஆண்டுகள்** (4½ ஆண்டுகள் + 1 வருட உள்ளிருப்பு பயிற்சி – MSVE விதிமுறை 2016 ன்படி) | 360 | 120* | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி<br>சென்னை – 600 007 |
| | | 80 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்<br>நாமக்கல் – 637 002 |
| | | 80 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்<br>திருநெல்வேலி – 627 358 |
| | | 80 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்<br>ஒரத்தநாடு – 614 625, தஞ்சாவூர் மாவட்டம் |
| **உணவுத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு** BTech - Food Technology (4 ஆண்டுகள்) | 40 | | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி<br>கோடுவளி, சென்னை – 600 052 |
| **கோழியின தொழில்நுட்ப பட்டப்படிப்பு** BTech – Poultry Technology (4 ஆண்டுகள்) | 40 | | கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி<br>மத்திகிரி, ஒசூர் – 635 110 |
| **பால்வளத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு** BTech – Dairy Technology (4 ஆண்டுகள்) | 20 | | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி<br>கோடுவளி, சென்னை – 600 052 |

*** தமிழக அரசு மற்றும் இந்திய கால்நடை மருத்துவக் குழுமத்தின் ஆணைக்கேற்ப மாற்றத்திற்கு உட்பட்டது.**

குறிப்பு:
1) **BVSc & AHல் 15 சதவீத இடங்கள், இந்திய கால்நடை மருத்துவக் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.**
2) **BTech (Food Technology)ல் 15 சதவீத இடங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.**

தகவல் தொகுப்பேடு, சேர்க்கைத் தகுதிகள், தேர்வு செய்யப்படும் முறை மற்றும் இதர விவரங்களை **www.tanuvas.ac.in** மற்றும் **www2.tanuvas.ac.in** என்ற பல்கலைக்கழக இணையதளங்களில் **08.05.2019, 10:00 மணி** முதல் காணலாம்.

- விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் விண்ணப்பம் மற்றும் தகுந்த சான்றிதழ் நகல்களை பதிவேற்றம் (Upload) செய்து, விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தியவுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பதிவிறக்கம் (Download) செய்து, தகுந்த சான்றிதழ் நகல்களுடன் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் **(பிவிஎஸ்ஸி & ஏஎச் / பிடெக்)** தனித்தனியாக

  **தலைவர், சேர்க்கைக் குழு (இளநிலை பட்டப்படிப்பு)**
  **தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
  **மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051**

  அவர்களுக்கு **10.06.2019 ஆம் தேதி மாலை 5:45 மணிக்குள்** கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.
- **இணையதள விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். பிற வடிவ விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**அயல்நாடு வாழ் இந்தியர் (NRIs) / அயல்நாடு வாழ் இந்தியரின் குழந்தைகள் (Wards of NRIs) / அயல்நாடு வாழ் இந்தியரின் நிதி ஆதரவு பெற்றோர் (NRI Sponsored)** மற்றும் **அயல்நாட்டினர் (Foreign National)** இட ஒதுக்கீடு, இணையதள விண்ணப்பப் படிவங்கள், வழிமுறைகள் மற்றும் இதர விவரங்களை பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் **(www.tanuvas.ac.in** மற்றும் **www2.tanuvas.ac.in)** அறிந்து கொள்ளலாம்.

**தலைவர்**
**சேர்க்கைக் குழு (இளநிலை பட்டப் படிப்பு)**
**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
**சென்னை – 600 051**

இடம் : சென்னை – 600 051
நாள் : 07–05–2019